SHANKAR IAS ACADEMY™
SINCE 2004
The Best IAS Academy in India

# ALL TN STATE LEVEL FREE TNPSC GROUP II / II-A MAIN MOCK TEST - 2023

**TEGR2-23**

Do not write anything in this box

தேர்வு
Examination : Combined Civil Services Examination – II / II-A [Group – II / II-A Services] Main Written Examination

பாடம் : Tamil Eligibility
Subject : [ PAPER - I ]

தேர்வு நாள் :
Date of Examination : 12.02.2023

**தேர்வு நேரம் :**
Time of Examination : 2.00 PM to 5.00 PM

Do not use this area

Booklet Serial No. :

Do not write anything in this box

தேர்வு
Examination : Combined Civil Services Examination – II / II-A [Group – II / II-A Services] Main Written Examination

பாடம் : Tamil Eligibility
Subject : [ PAPER - I ]

தேர்வு நாள் :
Date of Examination : 12.02.2023

Register No. :

Signature of the candidate with date.

**Certificate**

I have issued this booklet to this candidate after verifying his / her register No., photo and signature in the hall ticket.

Signature of the Invigilator with date.

**Certificate**

(To be signed after the completion of the exam.)

I have struck out all the unanswered blank spaces in the question-cum-answer booklet by using black colour pen which I have used for writings the answers.

Signature of the candidate with date.

SHANKAR IAS ACADEMY
SINCE 2004
The Best IAS Academy in India

## TNPSC GROUP – II/IIA MAIN WRITTEN EXAMINATION - 2023

**Offline / Online**

**PAPER - I**
**Mock Test 1**

**Date:** 12022023

**Mail ID:**

**Name:**

**Mobile No:**

**TNPSC Register No:**

**Examination Centre:**

**PSTM:** YES / NO

| SECURED MARKS | |
|---|---|
| திருக்குறள் தொடர்பான கட்டுரை வரைதல் – Q.No.1 | / 15 |
| பொருள் உணர்திறன் – Q.No.2 | / 10 |
| சுருக்கி வரைதல் – Q.No.3 | / 10 |
| விரிவாக்கம் செய்தல் – Q.No.4 | / 10 |
| ஆங்கில மொழி பெயர்ப்பு – Q.No.5 | / 10 |
| தமிழ் மொழி பெயர்ப்பு – Q.No.6 | / 10 |
| அலுவலகக் கடிதம் – Q.No.7 | / 15 |
| தமிழ் மொழி அறிவு – Q.No.8 | / 20 |
| Grand Total | / 100 |

# தமிழ் - முதல் தாள்
# TAMIL - Paper - I
**(பத்தாம் வகுப்புத் தரம்)**
**(10th Standard)**

கால அளவு : மூன்று மணி நேரம் | மொத்த மதிப்பெண்கள் : 100

Duration : 3 Hours | Total Marks : 100

(இவ்விடைத்தாள் தொகுப்பு 32 பக்ககங்களைக் கொண்டது)

(This answer booklet consists of 32 pages)

அறிவுரைகள்/Instructions

(கீழ்க்கண்ட அறிவுரைகளை விண்ணப்பதாரர்கள் தவறாமல் பின்பற்ற வேண்டும்)

(Candidates shall comply with the following instructions)

1. வினாத்தாள்களில் கொடுக்கப்பட்டுள்ள வினாக்கள் தமிழ் மற்றும் ஆங்கில வடிவங்களில் உள்ளன, அனைத்து இனங்களிலும் ஆங்கில வடிவில் தரப்பட்டுள்ள குறிப்புகளே முடிவானவை,

   The given questions in the question paper are in Tamil and English versions. In all matters, English version is final.

2. இத்தேர்வை பொறுத்தவரை, அழகாக எழுதுவதற்காகவும், பிழையில்லாமல் எழுதுவதற்காகவும் தனியாக மதிப்பெண்கள் ஒதுக்கப்படவில்லை,

   There is no reservation of marks for neatness of execution and correctness os spelling in respect of this examination.

3. விண்ணப்பதாரர்கள், இவ்விடைத்தாள் தொகுப்பு **32** பக்கங்களைக் கொண்டுள்ளது என்பதை முதலில் உறுதி செய்து கொள்ள வேண்டும். இத்தொகுப்பில் ஏதேனும் குறைபாடிருப்பின், உடனடியாக வேறு தொகுப்பை தேர்வுக் கண்காணிப்பாளரிடம் கோரிப் பெற்றுக் கொள்ள வேண்டும்.

   Candidates shall first ensure that this answer booklet contains 32 pages. In case if any defect is found in this booklet, they can request for replacement from the invigilator immediately.

4. ஒவ்வொரு வினாவிற்கும் தனித்தனியாக விடை எழுதுவதற்கென இடம் ஒதுக்கப்பட்டுள்ளது. விண்ணப்பதாரர்கள் ஒவ்வொரு வினாவிற்கும் விடையளிக்க ஒதுக்கப்பட்ட இடத்தில் மட்டுமே விடையளிக்க வேண்டும். விடையளிக்க ஒதுக்கப்பட்ட கட்டத்திற்கு வெளியே எதையும் எழுதக்கூடாது.

   Space has been provided to write the answer for each question. Candidates have to answer the questions only in the space provided for that questions. Candidates should not write anything outside the box provided.

5. விண்ணப்பதாரர்கள் தங்களது பதிவு எண்ணை இத்தொகுப்பில் எந்த இடத்திலும் எழுதக்கூடாது இந்த அறிவுரையை மீறும் விண்ணப்பதாரர்களுக்கு உரிய தண்டனை விதிக்கப்படும்,

   Candidates should not write their register number anywhere in this booklet. Suitable penalty will be imposed on the candidates who violate this instruction.

6. விண்ணப்பதாரர்கள் இந்த விடைத் தொகுப்பிலிருந்து எந்தத் தாளையும் கிழித்துவிடக் கூடாது.

   Candidates should not tear off any leaves from this answer booklet.

7. விண்ணப்பதாரர்கள் வினாத்தாளின் ஒவ்வொரு பிரிவிலும் அறிவுறுத்தப்பட்டுள்ள எண்ணிக்கையிலான வினாக்களுக்கு மட்டுமே விடையளிக்க வேண்டும். அதற்கு மிகையான எண்ணிக்கையிலான வினாக்களுக்கு விடையளித்தால். ஒவ்வொரு பிரிவின் முடிவிலும் மிகையான எண்ணிக்கையில் விடையளிக்கப்பட்டவை கணக்கில் எடுத்துக்கொள்ளப்பட மாட்டாது

   Candidates should answer as many number of questions as instructed in the question paper in each section. If more that the required number of questions are answered, the answers written at the end of each section will not be taken into account.

8. விண்ணப்பதாரர்கள் கடித வடிவிலான வினாக்களுக்கு விடையளிகும் பொழுது தங்களது பெயரையோ, பதிவெண்ணையோ எழுதக்கூடாது, தங்களது பெயரில் கையொப்பமிடவும் அனுமதியில்லை. அவ்வாறான வினாக்களுக்கு பதிலளிக்கும்பொழுது வினாக்களில் குறிப்பிடப்பட்டுள்ள பெயர் மற்றும் முகவரியையே பயன்படுத்தவேண்டும்.

   வினாக்களில் பெயர், முகவரி ஆகியவை குறிப்பிடப்படவில்லையெனில், ‘அனுப்புநர்’, ‘பெறுநர்’ முகவரிகளில் அஆஇ, எக்ஸ் ஒய் இசட் அல்லது எக்ஸ் எக்ஸ் எக்ஸ் போன்ற பொதுப் பெயர்களை மட்டுமே எழுத வேண்டும்.

   Candidates should not write their name or register number while answering letter type questions. Putting signature in their name is also not permitted. To answer such questions, the name & address given in the questions alone should be used.

   If no name is given in the questions, they should write the general names like ABC or XYZ or XXX in ‘From’ and ‘To’ addresses.

SHANKAR IAS ACADEMY
SINCE 2004
The Best IAS Academy in India

## வினாத்தாளுக்கான விதிமுறைகள்

**வினாக்களுக்கு விடை எழுதும் முன் கீழ்க்காணும் விதிமுறைகளைக் கவனமாகப் படிக்கவும்**

- அனைத்து வினாக்களுக்கும் விடை எழுதுக,
- வினா / வினாப்பகுதிகளுக்கான மதிப்பெண்கள் அவற்றின்
- விடைகள் **தமிழில் (தமிழ் எழுத்தில்)** மட்டுமே எழுதுதல் வேண்டும். அல்லது வினாத்தாளில் குறிப்பிட்டபடி எழுதுதல் வேண்டும்.
- எந்தெந்த வினாக்களில் சொற்களின் எண்ணிக்கையளவு கொடுக்கப்பட்டிருக்கிறதா, அதன்படி விடை எழுதுதல் வேண்டும். குறிப்பிட்டிருக்கும் எண்ணிக்கையளவுக்கு மிக அதிகமாகவோ அல்லது குறைவாகவோ விடை அமைந்தால் மதிப்பெண்கள் குறைக்கப்படும், வினா-விடைக் கையேட்டில் எழுதாத பகுதி / பக்கங்கள் இருப்பின் அவற்றின் குறுக்கே கோடு இடவும்.

## QUESTION PAPER SPECIFIC INSTRUCTIONS

**Please read each of the following instructions carefully before attempting quesion.**

- All questions are to be attempted.
- The number of marks carried by a question / part is indicated against it.
- Answer must be written in TAMIL (Tamil Script) unless otherwise directed in the question.
- Word limit in questions, wherever specified, should be adhered to and if answered in much longer or shorter than the prescribed length, marks may be deducted.
- Any page or portion of the page left blank in the Question-cum-Answer Booklet must be clearly struck off.

SHANKAR IAS ACADEMY

| Q.No. | |
|---|---|
| 1 | **பின்வருவனவற்றுள் ஏதேனும் ஒன்று குறித்து 300 சொற்களில் கட்டுரை வரைக.**<br>A. "திருக்குறள் ஒரு பகுத்தறிவு நூல்" - சான்று தந்து விளக்குக<br>B. அரசியல் நெறிகுறித்து வள்ளுவரின் சிந்தனைகளை விளக்குக.<br>C. தமிழரின் வாழ்வியலை காட்சிப்படுத்தும் ஓர் இலக்கியம் திருக்குறள் என்பதனை சான்று தந்து விளக்குக<br>D. திருக்குறளின் கருத்துக்கள் எவ்வாறு சுற்றுச்சூழலை காக்க துணைபுரிகிறது?<br>E. வள்ளுவம் அறிவியல் கருத்துக்களை உள்ளடக்கிய நூல் என்பதனை நிறுவுக.<br>**15 மதிப்பெண்கள்** |

**விடை**

SHANKAR IAS ACADEMY

SHANKAR IAS ACADEMY

| Q.No. 2 | **பின்வரும் பகுதியை கவனமாகப் படித்து, அதன் இறுதியில் தரப்பட்டுள்ள வினாக்களுக்கு தெளிவாகவும், சரியாகவும், சுருக்கமாகவும் விடை எழுதுக.** **5 x 2 = 10 மதிப்பெண்கள்** |
|---|---|

நாகரிகமும் பண்பாடும் ஒன்றோடு ஒன்று தொடர்புடைய இரு மாறுபட்ட கூறுகள் எனலாம். நாகரிகம் என்பது புறவளர்ச்சியைக் கூறுகின்றது. பண்பாடு என்பது அகவளர்ச்சியாகிய ஆன்மிக உயர் வளர்ச்சிக்கு உறுதுணையாக அமைகிறது.

மனித வாழ்வின் இரு அடிப்படைக் கூறுகள் முறையே உடலும் உயிரும் ஆகும். இதில் நாகரிகத்தை உடல் எனலாம். புறத்தேவைகளின் வளர்ச்சியால் ஒரு நாடு இன்றுள்ள சூழலில் வாழ்வின் எல்லாத் துறைகளிலும் உலகப்புகழ் பெற்று முதலிடத்தைப் பெறலாம்.

அந்நாடு அடைந்துள்ள அறிவியல்துறை, தொழில்துறை மற்றும் பல்வேறு கண்டுபிடிப்புகள் அந்நாட்டு மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தலாம். தொழில் வளர்ச்சியால் பொருளாதார உயர்வும் ஏற்படலாம். இவ்வளர்ச்சிகள் அனைத்தும் புறவளர்ச்சியாகும்.

பண்பாடு உயிருக்கு இணையானது. இப்பண்பாடு மக்களின் அகவளர்ச்சியாகும். மக்கள் மனதில் தோன்றி ஒளிர்கின்ற உயர் குணங்களின் தொகுப்பாகும். இச்சீரிய பண்பாடு மக்களின் எண்ணம், சொல், செயல் இவற்றால் வெளிப்படுகிறது. மனித வாழ்வில் புற வளர்ச்சிக்கிடையே அகவளர்ச்சியாகிய ஒழுக்கம், பணிவு,வாய்மை, தூய்மை, இரக்கம், மனிதநேயம் முதலான அகவளர்ச்சிக் கூறுகளின் செயல்பாடே 'பண்பாடு' எனலாம்.

எனவே 'உடலின்றி உயிர் அமையாது' என்பதற்கேற்ப நாகரிகமும் பண்பாடும் ஒன்றுடன் ஒன்று தொடர்புடைய இரு அடிப்படைக் கூறுகள் எனலாம்.

| Q.No. 2(1) | **உயிருக்கு இணையானது யாது?** |
|---|---|

**விடை**

| Q.No. 2(2) | **அகவளர்ச்சியின் கூறுகள் யாவை?** |
|---|---|

**விடை / ANSWER**

| Q.No. 2(3) | மனித வாழ்வின் இரு அடிப்படைக் கூறுகள் யாவை? |
|---|---|

**விடை**

| Q.No. 2(4) | மேற்க்கூறிய பத்தியிலிருந்து நீவீர் அறிந்து கொண்டது என்ன? |
|---|---|

**விடை**

| Q.No. 2(5) | பண்பாடு என்பதனை வரையறு. |
|---|---|

**விடை**

SHANKAR IAS ACADEMY

| Q.No. 3 | **கீழ்க்காணும் பகுதியை அதன் அளவில் மூன்றில் ஒரு பங்கு அளவில் சுருக்கி உங்கள் சொந்த நடையில் எழுதுக. தலைப்புத் தேவையில்லை.** **10 மதிப்பெண்கள்** |
|---|---|

உலகின் பல்வேறு பகுதிகளில் அடிக்கடி ஏற்படும் இயற்கை இடர்பாடுகளுக்கு முக்கிய காரணியாக இருப்பது காலநிலை மாற்றம். காலநிலை மாற்றத்தின் விளைவாக புவியின் கடற்பரப்பு மற்றும் நிலப்பரப்புகளில் பல்வேறு மாறுதல்கள் ஏற்படுகின்றன. இந்த மாறுதல்களுக்கு முக்கிய காரணமாக சொல்லப்படுவது புவி வெப்பமயமாதல்.

புவி வெப்பமயமாதலின் மூலம் மனிதர்களாகிய நாம் இதுவரை கவனத்தில் கொள்ளாத பல்வேறு விளைவுகளும் ஏற்பட்டு கொண்டிருக்கின்றன. சமீபத்தில் அமெரிக்க பாதுகாப்புத்துறையின் ஆதரவின் மூலம் மேற்கொள்ளப்பட்ட ஒரு ஆய்வு முடிவுகளின்படி, காலநிலை மாற்றத்தால் புவியில் உள்ள 65% பூச்சியினங்கள் அடுத்த நூற்றாண்டுக்குள் அழிந்து போக கூடும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது

நேச்சர் க்ளைமேட் சேஞ்ச் (Nature Climate Change) இதழில் வெளியிடப்பட்ட அந்த ஆய்வுக்கு, வெப்பநிலையின் ஏற்ற இறக்கங்கள் மூலம் ஏற்படும் காலநிலை-மத்தியஸ்த (Climate-Mediate) மாற்றங்கள் அழிவு அபாயத்தை ஊக்குவிக்கின்றன என்று தலைப்பிடப்பட்டுள்ளது. வெப்ப அழுத்தத்தின் காரணமாக காலநிலை-மத்தியஸ்த மாற்றங்கள் விலங்குகளின் எண்ணிக்கையை சீர்குலைத்து, அழிவு அபாயத்தை ஊக்குவிக்கும் என்று சொல்லப்பட்டுள்ளது.

வெப்பநிலையில் ஏற்படும் தீவிர மாற்றங்களின் விளைவாக, ஆய்வு செய்யப்பட்ட 38 வகையான பூச்சியினங்களில் 65% பூச்சியினங்கள் அடுத்த 50 முதல் 100 ஆண்டுகளில் அழிந்துவிடும் அபாயத்தை எதிர்கொள்ள நேரிடும் என்று சொல்லப்பட்டுள்ளது. புவி வெப்பமயமாதலின் மூலம் அதிகம் பாதிக்கப்படக் கூடியவை குளிர்ந்த ரத்தம் கொண்ட பூச்சியினங்கள். ஏனெனில் அவை வெளிப்புற வெப்பநிலைகளில் மாற்றம் ஏற்படும்போது அவை தங்கள் உடல் வெப்பநிலையை கட்டுப்படுத்தும் திறனைக் கொண்டிருக்கவில்லை.

**விடை**

SHANKAR IAS ACADEMY

SHANKAR IAS ACADEMY

| Q.No. 4 | **பின்வரும் சுருக்கக் குறிப்பிலிருந்து விரிவாக்கம் செய்தல் (300 வார்த்தைகளுக்கு மிகாமல்)** **10 மதிப்பெண்கள்**<br><br>குறிஞ்சி - முல்லை - மருதம் - நெய்தல் - பாலை - வாழ்வியல் முறை - சமூக பொருளாதார நிலை |
|---|---|

**விடை**

SHANKAR IAS ACADEMY

| | | |
|---|---|---|
| | | |
| | | |
| | | |
| | | |
| | | |
| | | |
| | | |
| | | |
| | | |
| | | |
| | | |
| | | |
| | | |
| | | |
| | | |
| | | |
| | | |
| | | |
| | | |
| | | |
| | | |
| | | |
| | | |
| | | |
| | | |

SHANKAR IAS ACADEMY

| | | |
|---|---|---|
| | | |
| | | |
| | | |
| | | |
| | | |
| | | |
| | | |
| | | |
| | | |
| | | |
| | | |
| | | |
| | | |
| | | |
| | | |
| | | |
| | | |
| | | |
| | | |
| | | |
| | | |
| | | |
| | | |
| | | |

SHANKAR IAS ACADEMY

SHANKAR IAS ACADEMY

| Q.No. 5 | பின்வரும் பகுதியை ஆங்கிலத்தில் மொழிப்பெயர்த்து எழுதுக **10 மதிப்பெண்கள்** |
|---|---|

இந்தியாவில் நடைபெற்ற அகழாய்வுகளில் ஆதிச்சநல்லூரில் நடைபெற்ற அகழாய்வே, முதல் அகழாய்வாகும். இந்த அகழாய்வில் கண்டெடுக்கப்பட்ட தொல்பொருட்கள் தாம் மிகத் தொன்மை வாய்ந்தவையாகக் கருதப்படுகின்றன.

ஆதிச்சநல்லூர் அகழ்வாராய்ச்சி வரலாற்றில் தமிழி எழுத்துக்களைக் கொண்ட பானை ஓடுகள் தற்போதைய அகழாய்வுகளில் கிடைத்துள்ளன. மேலும், குறியீடுகள் கொண்ட பானை ஓடுகள் 500 க்கும் மேற்பட்ட எண்ணிக்கையில் கிடைக்கின்றன. இதன் வாயிலாகத் தொடக்க வரலாற்றுக் கால மக்கள் இங்கு வாழ்ந்திருப்பதை உறுதி செய்ய முடிகிறது. இம்மக்கள் இரும்புக் காலத்தைத் தொடர்ந்து இப்பகுதியில் வாழ்ந்து வந்திருப்பதை அவர்கள் பயன்படுத்திய பல்வேறு மட்பாண்டங்கள், தொல்பொருட்கள், துளையிடப்பட்ட கூரை ஓடுகள் போன்ற சான்றுகள் வாயிலாக அறிகிறோம்.

கீழடி போன்றே தொன்மை மிக்க தமிழ்ப் பண்பாட்டு அடையாளமாகக் கருதவேண்டியது சிவகளை தொல் மாந்தர் வாழ்விடம். சிவகளை முதற்கட்ட அகழ்வாய்வில் கிடைக்கப்பெற்ற 'ஆதன்' என்ற தமிழி எழுத்துப் பொறிக்கப்பட்ட பானையோடு, நமக்கு கீழடியை நினைவூட்டுகிறது.

சிவகளையில் மேற்கொள்ளப்பட்ட அகழாய்வில் ஈமத்தாழி ஒன்றில் சேகரிக்கப்பட்ட நெல்லினைக் காலக் கணக்கீடு செய்ததில் இதனின் காலம் கி.மு. 1155 என்று கண்டறியப்பட்டுள்ளது. எனவே, பொருநை ஆற்றங்கரையில் வாழ்ந்த தமிழ்ச் சமூகத்தினரின் மேம்பட்ட பண்பாடு 3200 ஆண்டுகளுக்கு முற்பட்டது என்று உறுதி செய்ய முடிகிறது.

**விடை**

SHANKAR IAS ACADEMY

SHANKAR IAS ACADEMY

| Q.No. 6 | பின்வரும் பகுதியை தமிழில் மொழிப்பெயர்த்து எழுதுக. **10 மதிப்பெண்கள்** |
|---|---|

The Mars Orbiter Mission (MOM), also called Mangalyaan, was a space probe orbiting Mars since 24 September 2014. It was launched on 5 November 2013 by the Indian Space Research Organization (ISRO). It was India's first interplanetary mission and it made ISRO the fourth space agency to achieve Mars orbit. It made India the first Asian nation to reach the Martian orbit and the first nation in the world to do so on its maiden attempt

The Mars Orbiter Mission probe lifted-off from Satish Dhawan Space Centre (Sriharikota Range SHAR), Andhra Pradesh, using a Polar Satellite Launch Vehicle (PSLV) rocket C25 on 5 November 2013.The MOM probe spent about a month in Earth orbit, where it made a series of seven apogee-raising orbital maneuvers before trans-Mars injection on 30 November 2013. After a 298-day transit to Mars, it was put into Mars orbit on 24 September 2014.

The mission was a "technology demonstrator" project to develop the technologies for designing, planning, management, and operations of an interplanetary mission. It carried five scientific instruments

On 2 October 2022, it was reported that the orbiter had irrecoverably lost communications with Earth after entering a seven-hour eclipse period in April 2022 that it was not designed to survive

**விடை**

SHANKAR IAS ACADEMY

SHANKAR IAS ACADEMY

| Q.No. 7 | அலுவலகக் கடிதம் <br> **15 மதிப்பெண்கள்** <br> சென்னை உயர் நீதிமன்றத்தின் மதுரை கிளையின் தீர்ப்பினை ஏற்று தமிழ் வழியில் பயின்ற மாணவர்களுக்கான இட ஒதுக்கீட்டை வேலைவாய்ப்பில் சரியான முறையில் நடைமுறைப்படுத்திட அனைத்து அரசுப்பணி தேர்வாணையங்களுக்கும் அறிக்கை ஒன்றை அனுப்பிடுக <br><br> (குறிப்பு: அனுப்புநர், பெறுநருக்கு முறையே “அஅஅ” மற்றும் “ஆஆஆ” என்றும் பயன்படுத்துக. கையொப்பமோ, பதிவு எண்ணையோ எங்கும் பயன்படுத்தக்கூடாது) |
|---|---|

**விடை**

SHANKAR IAS ACADEMY

SHANKAR IAS ACADEMY

| | |
|---|---|
| **Q.No. 8** | **தமிழ் மொழி அறிவு** <br> **20 மதிப்பெண்கள்** |
| **Q.No. 8 (அ)** | கீழ்க்காணும் சொற்களை உமது சொந்த வாக்கியத்தில் அமைத்தது எழுதுக. <br> 1. பழந்தமிழ் <br> 2. நல்லொழுக்கம் <br> 3. பெருவிழா <br> 4. பொங்கல் |

**விடை**

| | |
|---|---|
| Q.No. 8 (ஆ) | பின்வரும் இணைச்சொற்களை பயன்படுத்தி ஒரே தொடர் அமைக்க. <br> 1. கொல்லி - கொள்ளி <br> 2. பள்ளி - பல்லி <br> 3. எலும்பு - எழும்பு <br> 4. ஆணி - ஆனி |

**விடை**

SHANKAR IAS ACADEMY

| Q.No. 8 (இ) | பிரித்தெழுதுக<br>1. பேராசிரியர்<br>2. நூற்றாண்டு<br>3. பல்கலைக்கழகம்<br>4. பன்மொழி |
|---|---|

**விடை**

SHANKAR IAS ACADEMY

| Q.No. 8 (ஈ) | எதிர்சொல் தருக.<br>1. மலர்தல்<br>2. ஒற்றுமை<br>3. நீதி<br>4. வறுமை |
|---|---|

**விடை**

| Q.No. 8 (உ) | பிழை நீக்கி எழுதுக<br>1. புளி மானை வேட்டையாடியது.<br>2. கிளி பழம் திண்றது<br>3. இங்கே வந்தவன் அவன் அள்ளன்<br>4. கீலடி மதுரை மாவட்டத்தில் அமைந்துள்ளது |
|---|---|

SHANKAR IAS ACADEMY

விடை

SHANKAR IAS ACADEMY

# SPACE FOR ROUGH WORK

SHANKAR IAS ACADEMY